Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily

தந்தி விலாசம்: ... தபாற் பெட்டி எண் : 49
போன் 889

மலர் 9
இதழ் 141
தேசிய தினசரி

... பிலவங்க ஆனி 18 ரபி அவ். 23 ஞாயிற்றுக்கிழமை [2 7 67]

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
16, டாம் வீதி கொழும்பு

# அதிபர் பதவியிலிருந்து லியு-ஷா-சி நீக்கம்

ஹாங்காங், ஜூலை 1

சீனாவின் ஜனாதிபதி பதவியிலிருந்து லியு-ஷா-சி நீக்கப் பட்டுவிட்டதாக பீக்கிங்கிலிருந்துவந்த தகவல்கள் கூறுவதாக இங்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்செய்தி பற்றிய முழு விபரம் இன்னும் கிடைக்கவில்லை. ஆயினும் அதிபர் லியு-ஷா-சி மீது செங்காவலர் தாக்குதல் நடத்தியதும் லியு-ஷா-சி எங்கிருக்கிறார் என்ற தகவல் தெரியவில்லையென செய்திகள் வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது. சீனத் தலைவர் மா-ஸே-துங் கொள்கையை அதிபர் லியு-ஷா-சி எதிர்த்ததாகவும் இதைத் தொடர்ந்தே மாவின் ஆதரவாளர்கள் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் கிளர்ச்சிகளும் நடத்தியதாகவும் செய்திகள் வெளிவந்தன.

## கல்முனையில் அமைதி நிலவ சமாதானகுழு

### அமைச்சர்களின் சமாதானத்தூது

கொழும்பு, வெள்ளி

கல்முனையில் நிரந்தர அமைதியையும் ஒழுங்கையும் ஏற்படுத்துவதற்கு சமாதானத் தூதுவர்களாக இன்று காலை கல்முனைக்குச்சென்ற தொழிலமைச்சர் திரு. எம். எச். முகமத்தும், உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வமும் தமது பணியைவெற்றிகரமாக முடித்துக்கொண்டு இன்று மாலை கொழும்பு வந்து சேர்ந்தனர்.

இன்றுகாலை 10-30மணியிலிருந்து மாலை 4-30மணி வரை அமைச்சர்கள் முஸ்லிம் பெரியார்களையும், தமிழ்ப்பெரியார்களையும் சந்தித்து அமைதிக்கான வழிகளைப்பற்றி பேச்சுவார்த்தை நடத்தியதன் முடிவில் இரு சமாதானக் கமிட்டியை நியமித்தனர்.

முஸ்லிம்கள் சார்பில் முஸ்லிம் பெரியார்களும் தமிழ் மக்களின் சார்பில் தமிழ்ப் பெரியார்களும இந்த இரு கமிட்டிகளில் அங்கம் வகிக்கின்றனர்.

இன்று அமைச்சர்கள் இருவரும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களையும் கிழக்குப்பகுதி அங்கத்தவர் சிலரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்கள்.

கல்முனையில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கு அமைச்சர்கள் தயமான சகல முயற்சிகளிலும் இன்று ஈடுபட்டனர்.

## 1-ம் எதிரி அல்பேனியாவில்; விசாரணை நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக் கிளைப் பிரதிநிதிகள் மூவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் முதலாம் எதிரியான சுப்பிரமணியம் அல்பேனியாவுக்குச் சென்றுள்ளதால் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கு நேற்றுக் காலை மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. நெத்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது விசாரணையைப் பார்ப்பதற்காக செஞ்சட்டை அணிந்த வாலிபர்கள் உட்படக் கோர்ட்டிற்கு ஏராளமானோர் வந்திருந்தனர்.

இவ்வழக்கில் சுப்பிரமணியம். கந்தசாமி, சூடாமணி ஆகிய மூவரும் ஏ. எஸ். பி. யின் உத்தரவை மீறி ஊர்வலம் நடத்தியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் ஆஜரான புறக்டர் ஏ. அன்ரனி முதலாம் எதிரியாகிய சுப்பிரமணியம், வாலிபர் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக அல்பேனியா சென்றுள்ளதாகவும், விசாரணையை ஒத்திவைக்குமாறும் மாஜிஸ்திரேட்டைக் கேட்டுக்கொண்டார். இதை ஏற்றுக்கொண்ட மாஜிஸ்திரேட், விசாரணையை ஆகஸ்ட் 15ந்தேதிவரை ஒத்திவைத்தார்.

### மார்ஷல் கீ அதிபர் பதவிக்கு போட்டியிடவில்லை

சைகோன், ஜூலை 1

தென்வியட்னும் பிரதமர் ஏயர் மார்ஷல் கீ அதிபர் பதவிக்குப் போட்டியிடவில்லையென அறிவிக்கப்பட்டது. அதிபர் பதவிக்குப் போட்டியிடுபவர்கள் தாக்கல் செய்த பத்திரத்தில் அவர் பெயர் இல்லையென்றும், துணை அதிபர் பதவிக்கே அவர் போட்டியிடுகிருரென்றும் அறிவிக்கப்பட்டது.

## 6-வது பார்லிமெண்டின் 3-வது கூட்டத்தொடர்

### 8-ந் திகதி ஆரம்பம்

கொழும்பு, சனி

ஆருவதுபார்லிமெண்டின் மூன்ரும் கூட்டத்தொடரை கவர்னர் ஜெனரல் இம்மாதம் 8-ம் திகதி பகல் 10 மணிக்கு ஆரம்பித்து வைப்பார்.

காலை 9.58 மணிக்கு கவர்னர் ஜெனரல் பார்லிமெண்ட்டை வந்தடைவார் அவர் இரு சபைகளின் செயலதிகாரிகளினுலும் வரவேற்கப்பட்டு மேடைக்குஅழைத்துச் செல்லப்படுவார். பின்னர் கவர்னர் ஜெனரல் சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்துவார்.

## சுறுசுறுப்பாகிவரும் காங்கேசன்துறைமுகம்

### ஒரே நேரத்தில் நான்கு வேலைகள்

காங்கேசன்துறை, சனி

காங்கேசன்துறை துறைமுகம் இப்பொழுது மிகவும் சுறுசுறுப்பான துறைமுகமாகக் காட்சியளிக்கிறது. ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவிலிருந்து (நாகபட்டினம் துறைமுகத்திலிருந்து) பத்து வருடங்களின் பின் இந்த வருடத்தில்தான் முதல் தடவையாக 150 தொன் நிறையுள்ள மருந்துச்சாமான்களை ஏற்றி வந்த 'டிங்கி' யொன்று காங்கேசன்துறைமுகத்துக்கு வந்துள்ளது. இந்த மருந்துச் சாமான்கள் யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர்களால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்த டிங்கியிலிருந்து மருந்துச் சாமான்கள் இப்போது இறக்குமதியாகிக் கொண்டிருக்கின்றன.

இன்று தொடக்கம் 'அவென்றி' என்ற டச்சுக் கப்பல் இரண்டாவது முறையாகக் காங்கேசன்துறை துறைமுகத்தில் தேயிலை ஏற்றுமதியிலீடுபட்டுக் கொண்டிருக்கிறது. ஏற்றுமதியாக்கப்படவிருக்கும் முழுத் தேயிலையும் இரு நாட்களில் இக் கப்பலில் ஏற்றுமதியாகிவிடுமென்றும் கொழும்பில் இதே அளவு தேயிலை கப்பலில் ஏற்றுவதற்கு மூன்று நாட்கள் வரை செல்லும் எனவும் அறியப்படுகிறது. இங்குள்ள தேயிலையை ஏற்றிக் கொண்டிருக்கும் 'அவென்றி' தென்அரேபியாவிலுள்ள டமாம் என்னும் துறைமுகத்துக்குச் செல்லவிருக்கிறது.

அண்மையில் வெளிநாட்டிலிருந்து ஏற்றி வந்த அரிசிக்கப்பலிலிருந்து அரிசி இறக்கும் வேலையும்தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவ்வித ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் அதிகரித்து வருவதால் இறங்குதுறைமுகம் அவசியமாக இருப்பதால் இந்த இறங்குதுறைமுக வேலையை இப்போது அரசாங்க என்ஜினியரிங் கார்ப்பரேஷன் துரிதமாகச் செய்து வருகிறது. காங்கேசன்துறை துறைமுகத்திலுள்ள தானியக்களஞ்சியத்தில் இப்போது இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் இறக்குமதி செய்யப்படும் பொருள்களை ஏற்ற வரும் கப்பல்கள் இங்கு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

### 20 ஈராக் இராணுவ வீரர் பிரிட்டனிலிருந்து நாடு கடத்தல்

லண்டன், ஜூலை 1

பிரிட்டனில் இராணுவப் பயிற்சி பெறும் 20 ஈராக் இராணுவ சாரணரைத் தமது நாட்டுக்குத் திரும்பிச் செல்லுமாறு பிரிட்டிஷ் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது

பிரிட்டனுடன் ஈராக் உறவுகள் மோசமடைந்ததைத் தொடர்ந்தே, இந்த உத்தரவை பிரிட்டிஷ் அரசாங்கம் பிறப்பித்துள்ளது.

## புதிய தொழில்கள் ஆரம்பிக்க செலாவணி

கொழும்பு, சனி

700புதிய கைத் தொழில்கள் ஆரம்பிப்பதற்கான மூலப்பொருள்களையும் இயந்திர சாதனங்களையும் இறக்குமதி செய்வதற்கு பன்னிரண்டு கோடி ரூபாய் செலாவணி அனுமதிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில்கள் ஆரம்பிப்பதற்கென கோரப்பட்ட முழுக்கோட்டாவும் சமீப காலத்தில் இப்பொழுது தான் முதல் தடவையாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது

உள்நாட்டில் காணப்படும் மூலவளங்களைப் பயன்படுத்தக்கூடிய தொழில்களுக்குக்முழு கோட்டா வழங்கப்பட்டுள்ளது.

## ஏர் இந்தியா விமானிகள் வேலைநிறுத்தம் முடிவு

புதுடில்லி, ஜூலை 1

ஏர் இந்தியா விமானிகள் தமது 5 நாள் வேலைநிறுத்தத்தை நேற்றிரவு 8 மணிக்கு வாபஸ்பெற்றுக்கொண்டனர்.

இந்த முடிவை விமானிகள் சங்கம் வெளியிட்டதும் ஏர் இந்திய ஸ்தாபனத்தலைவர் திரு. ஜே. ஆர். டாட்டா அதனை வரவேற்ருர்.

### சம்பளம் கிடைக்கும்

வேலை நிறுத்ததில் பங்கு பற்றிய விமானிகளுக்கு ஜூன் மாதச் சம்பளம் அளிக்கப்படுமென்று கூறிய திரு. டாட்டா, வேலைநிறுத்தக் காலத்துக்கு மட்டும் ஊதியம் அளிக்கப்படமாட்டாதென்றும் தெரிவித்தார்.

ஏர் இந்தியா விமானிகளின் வேலைநிறுத்தத்தின் விளைவாக இந்திய அரசாங்கம், கடந்த 5 நாட்களில் 40 லட்சம் ரூபாவை இழந்துள்ளதாகவும் அவர் மேலும் அறிவித்தார்.

### பீகிங்கில் பர்மிய எதிர்ப்பு நீடிக்கிறது

பீகிங், ஜூலை 1

பீகிங்கில், பர்மிய தூதரகத்துக்கு முன்னுல், நேற்று இரண்டாவது நாளாகப் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

ரங்கூனில் நடைபெற்ற சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைப் பர்மிய அரசாங்கமே தூண்டிவிட்டதாகவும், அவற்றுக்குப் பொறுப்பாளி பர்மிய புரட்சிகர அரசாங்கத் தலைவர் ஜெனரல் நீவின் தானென்றும் சீன மக்கள் தினசரியான 'பீப்பிள்ஸ் டெயிலி' கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஒரு குடும்பத்தில் ஒற்றுமை இருக்கும்போது அங்கு இன்பமுண்டு. பிளவும் சண்டையும் ஏற்பட்டால் துன்பம் தான். குடும்பம் ஒற்றுமைப்பட ஒரே வழி கடவுள் தான், அவர் பெயரால் நாம் ஒற்றுமைப் படுவோம்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்க ஹூ
ஆனி மீ 18உ (2-7-67)


## காங்கேசன்துறை துறைமுகம்

காங்கேசன்துறைத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் ஒரே சமயத்தில் நடைபெற்றுக்கொண்டிருப்பதுடன் இவ்வேலைகள் துரிதமாக நடைபெறுவதன் மூலம் இலங்கையின் இதர துறைமுகங்களில் நடைபெறும் வேலைகளுடன் ஒப்பிடுகையில் புதிய சாதனைகளையும் ஏற்படுத்திவருகிறது.

இலங்கையிலிருந்து கொழும்புத் துறைமுகத்தின் மூலம் மட்டுமே தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தது கொழும்புத் துறைமுகத்தில் அடிக்கடி ஏற்படும் வேலைநிறுத்தம், வீண்தாமதம் ஆகிய காரணங்களால்திருமலைத் துறைமுகத்திலிருந்தும் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தது. அங்கும் வேலைநிறுத்தம் மற்றும் பிரச்னைகளும ஏற்பட்டதால் தேயிலை ஏற்றுமதி வர்த்தகம் பாதிக்கப்பட்டது. இப்பொழுது முதல் தடவையாக காங்கேசன் துறைத் துறைமுகத்திலிருந்தும் தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகிறது. இங்கு அரிசி, மாவு முதலிய உணவுப் பொருள்களும் இறக்குமதிசெய்யப்படுகின்றன. இந்தியாவிலிருந்துவந்த 'டிங்கி' ஒன்றிலிருந்து மருந்துச்சமான்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. பொருள்களை இறக்கிவிடவும், இங்கிருந்து பொருள்களை ஏற்றிச் செல்லவும் வரும் கப்பல்கள் துறைமுகத்தில் ஏற்படும் இடநெருக்கடியாலோ தொழிலாளர் வேலை நிறுத்தத்தாலோ வேறு காரணங்களாலோ இங்கு தாமதிக்க நேர்ந்தால், அதற்காகப் பெருந்தொகையான பணம் செலுத்தவேண்டும். கொழும்புத்துறைமுக வேலைநிறுத்தம் காரணமாக இப்படிப் பெருந்தொகையான பணம் கப்பல் கம்பனிகளுக்கு முன்னர் செலுத்தப்பட்டிருக்கின்றன.

காங்கேசன் துறைத் துறைமுகத்தில் துரிதமாக வேலைகள் நடைபெறுவதால் இங்கு வரும் கப்பல்கள், அவை திரும்புவதற்குத் திட்டமிட்ட தினத்துக்கு முன்னதாகவே திரும்பிவிடுகின்றன

காங்கேசன் துறைத் துறைமுகம் இன்னும் அபிவிருத்தி செய்யப்படவில்லை. இத்துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி வேலைகளுக்கு வசதிகளே இல்லை. இந்த நிலையிலும் இலங்கையின் இதர துறைமுகங்களைவிட துரிதமாகவும் திறமையாகவும் வேலைகள் நடைபெறுகின்றன. காங்கேசன் துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்து இதர துறைமுகங்களுக்குள்ள வசதிகள் இங்கும் செய்யப்பட்டால் பல பிரச்னைகள்தீர வழிபிறக்கும். இந்திய அரசாங்கம் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றும் போது காங்கேசந்துறைத் துறைமுகம்தான் இலங்கைக்கு வருமானம் தேடித்தர வேண்டும். எனவே இன்றைய உபயோகத்தையும் எதிர்கால தேவையையும் கருதி, இனியும் வீண் காலதாமதம் செய்யாது காங்கேசந்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும்.

## வடபகுதி கூ. பண்டசாலை பரிசோதகர்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், சனி

விசேஷ முதலாம்தர கூட்டுறவுச் சங்கங்களின் பரிசோதகர்களாக 16 தமிழர்களை நியமிப்பதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டபோதிலும் தற்போது எட்டு தமிழரை மாத்திரம் நியமிக்க அதசாங்கம் மேற்கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளதைத் தொடர்ந்து வடபகுதி கூட்டுறவுப் பண்டகசாலைப் பரிசோதர்கள் மிகவும்அதிருப்திகொண்டுள்ளார்கள்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போன்று இல்லாத 16 ஸ்தானங்களிலும் 8 ஸ்தானத்தை மட்டும் தமிழருக்குக் கொடுத்து, மிகுதி 8 ஸ்தானங்களையும் சிங்களவருக்குக் கொடுக்கவிருப்பது அநீதியென்றும் இதுசம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்குமாறும் இதுசம்பந்தமாக வடபகுதி தமிழ் எம். பி.க்களைப் பேட்டி கண்ட தூதுக்குழு அவர்களிடம் தெரிவித்துள்ளதாக அறியப்படுகின்றது.

இதுபற்றி யாழ்ப்பாணம் எம் பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் ஆகியோரிடமும் கூட்டுறவுப் பகுதி இன்ஸ்பெக்டர்களைக் கொண்ட குழுவொன்று நேற்று நேரில் சென்று விஷயத்தைத் தெரிவித்ததாகத் தெரிகின்றது. [ந. நி.]

## ரோமாபுரி சென்றார்

யாழ்ப்பாணம், சனி

ஏழாலை மகாவித்தியாலய அதிபரும், வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கத் தலைவருமான திரு. சு. அம்பலவாணர், டென்மார்க்கில் நடைபெறும் சர்வதேச தொழில் ஸ்தாபனம், உணவு விவசாய ஸ்தாபனம் ஆகியவற்றின் ஆதரவிலான பிரதேச மகாநாட்டில் கலந்துகொள்ள, சுடந்த 28ந் திகதியன்று ரோமாபுரிக்கு விமான மூலம் பிரயாணமானார். இவர் அங்கு 5 வாரங்களுக்குத் தங்குவார்.

திரு. அம்பலவாணர், கடந்த 15 வருடங்களாகக் கூட்டுறவு இயக்கத்துடன் தொடர்பு உடையவராவர். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல்வேறு கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் அவர் பதவிவகித்துள்ளார்.

## வல்வையில்பெரிய பஜனைக் கூட்டம்

இமையாணன், சனி

"ஏழைகளே இல்லாத ஒரு சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதே நமது இலட்சியமாக இருக்க வேண்டும். அதற்கிடையே ஏழ்மைக் கொடுமையைக் குறைக்க நம்மால் ஆவன எல்லாம்செய்யவேண்டும்என்று பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகள், வல்வை சிவன் கோவில் முன்பாகக் கூடியிருந்த பெரும் கூட்டத்திலே, செய்த பஜனைப் பிரசங்கத்தில் குறிப்பிட்டார். நாவில் கூடாத சொல்லும், மனதிலே கூடாத எண்ணமும் வராமலிருக்க பகவான் நாமங்களே தடுத்துப் பாதுகாக்குமென்றும், வீடுகள் தோறும், ஊர்கள் தோறும் பெரியவர்களும் சிறுவர்களும் சேர்ந்து ஒரே நோக்கத்துடன் தெய்வநாமத்தை உச்சரித்தால், தீயன நீங்கி நல்வாழ்வு மலருமென்றார். பல்லாயிரக்கணக்கான ஆண்களும்பெண்களும் சுமார் 3 மணி நேரம் நடந்த இனிமையான பஜனையில் கலந்துகொண்டார்கள்.

[5-ம் கலத் தொடர்ச்சி]

நிகழ்ச்சியால், பலருக்கு நிச்சயம் நன்மை கிடைத்திருக்க வேண்டும்.

ஃ ஃ ஃ

முருகதாஸ் அவர்கள், தமிழகத்தில்வாலாஜா பேட்டை என்னுமிடத்தில் 500 ஏழைச் சிறுவர்களுக்கான தீனபந்து ஆசிரமத்தை பல வருடங்களாக நடத்தி வருவதாயும் அரசாங்க உதவியும் இதற்குக் கிடைப்பதாயும், ஈழத்திலேயும் முதலில் மலைநாட்டிலே இவ்வித தர்மத்தை சிறிய அளவிலேனும் ஆரம்பிக்க வேண்டுமென்பது தமது ஆர்வமென்றும் தெரிவித்தார். இந்த அனாதைச் சிறுவர்களுக்கு நல்ல முறையிலே இவ்வித ஆசிரமம் நடத்துவது நல்லதோர் பணியாகும்.

வாலிபத்திலே நாட்டு விடுதலை இயக்கத்தில் மூன்று முறை சிறை சென்று தியாகம் செய்தவராம் அவர். பிரம்மச்சாரி கேட்போர் யாரையும் கவர்ந்துவிடக் கூடிய மிக இனிய சாரம். அவரும் அவரது குரலும் தமிழுக்கும் சைவ உலகத்துக்கும் விலைமதிப்பற்ற மேலான செல்வங்களாகும். அவரும் அவரது பணிகளும் வாழ்க, வாழ்க!

ஃ ஃ ஃ

அரிச்சி ராப்பகல் ஐவரால் ஆட்டுண்டு கரிச்சிராது
நெஞ்சே யொன்று சொல்லக்கேள் திருச்சிராப்பள்ளி
யென்றலுந் தீவினை நரிச்சிராது நடக்கும் நடக்குமே.
—அப்பர் சுவாமிகள்

[நெஞ்சே! ஐம்புலக் கள்வரால் இராப்பகலாக ஆட்டுவிக்கப்பட்டு வருந்தி இராமல் இருக்க ஓர் உபாயம் சொல்லக் கேட்பாயாக. திருச்சிராப்பள்ளி என்றலும் தீவினை பொருந்தி இருக்காமல் உன்னை விட்டுச் சென்று விடும் சென்று விடும்.]

## தரம் உயர்வு

அராலி, சனி

அராலி வடக்கு சைவாங்கில வித்தியாசாலையின் தரம் உயர்த்தப்பட்டது. இனிமேல் இப்பாடசாலை அராலி இந்துக்கல்லூரி என அழைக்கப்படும். இதுவரை கலைப் பகுதி மாத்திரம் கற்பிக்கப் பட்டுவந்தது. இப்பாடசாலையில் இனிமேல் விஞ்ஞான பாடங்களும் கற்பிக்கப்படுமெனத் தெரிகிறது.

## புதிய அதிபர்

புங்குடுதீவு, சனி

புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்குப் புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போதைய அதிபர் திரு. சு. வில்வரத்தினம் இம் மாதம் 13-ம் திகதிசேவையிலிருந்து ஓய்வு பெறுவதால் புதிய அதிபர் திரு. த. கனகரத்தினம் 14-ந் திகதி பொறுப்பேற்பார் என அறிவிக்கப்படுகிறது.

## வைத்தியசாலை திறப்புவிழா

பூநகரி, சனி

கரைச்சிக்கிராமசபையால் ஸ்தாபிக்கப்பட்டுப் பரந்தன் கண்டாவளை வீதிக்கருகாமையில்வாடகைக்கட்டடத்தில் நடந்துவந்த இலவச ஆயுள்வேத வைத்தியசாலை குமரபுரம்-பரந்தன்சந்தைக் கட்டடத்தில் அமைக்கப்பெற்ற புதிய இடத்துக்கு மாற்றப்பட்டது. கிராம சபை உறுப்பினர் திரு. வே. சுப்பிரமணியம் இதனைத் திறந்து வைத்தார்.

இவ் வைத்திய சாலையின் தேவைகளைத்தாம் அக்கறையுடன் கவனிப்பதாக விழாவில் கலந்துகொண்டு பேசிய கரைச்சிக் கிராமசபைத்தலைவர் திரு. வி, ஆனந்த சங்கரி கூறினார். ஆயுர்வேத டாக்டர் திரு. க. பொன்னம்பலம் பேசினார்.

## சென்னை-திருச்சி எக்ஸ்பிரஸ் பஸ்

சென்னை, ஜூன் 1

சென்னை-திருச்சி புதியபஸ் மார்க்கத்தில் எக்ஸ்பிரஸ் பஸ்சேவையொன்றை நடாத்துவதையிட்டு போக்குவரத்து டைரக்டரிமிருந்து செயற்குறிப்பை எதிர்பார்ப்பதாகத்தமிழக பொதுத் துறை மந்திரி திரு.மு. கருணாநிதி கீழ் சட்ட சபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

அரசாங்கம் பஸ் சேவையைப் பொறுப் பேற்றபின் 7மார்க்கங்களில் 14எக்ஸ்பிரஸ் பஸ்கள் ஓடுவதாக திரு. கருணாநிதி அறிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டதைத்தொடர்ந்து பிரயாணிகளின் தொகை அதிகரித்துள்ளதெனவும் எக்ஸ்பிரஸ் சேவையில் இப்போது நாட்டமில்லை எனவும் திரு. கருணாநிதி மேலும் தெரிவித்தார்.

## 'நச்சுத்திராவகம் அருந்தியபின் கோவிலுக்குச்சென்று வழிபட்டார்'

### 3 பிள்ளைகளின் தாய் தற்கொலை

சாவகச்சேரி, ஞாயிறு

நோயின் கொடுமைதாங்க முடியாத ஒரு பெண் நச்சுத்திராவகமருந்திய பின், அம்மன் கோவிலுக்குச் சென்று வழிபட்டு விட்டு, திரும்பவும் வீட்டில் வந்து மரணமான சம்பவமொன்று கச்சாயில் நடந்துள்ளது.

ராணிஎன்றழைக்கப்படும் தில்லைநாதனின் மனைவி நல்லம்மாவின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

மூன்று பிள்ளைகளுக்கு தாயான ராணி நோயின் காரணமாக நச்சுத் திராவகம் அருந்தியதாகவும், தனது மூன்று பிள்ளைகளையும் [illegible] டைக்கும்படியும் ஒரு கடிதத்தில் எழுதி வைத்திருந்தார்.

இறந்த பெண் தெய்வ பக்தியுடையவரென்றும், நச்சுத்திராவகம் குடித்த பின் கோவிலிக்குச் சென்றாரென்றும், வீட்டிற்கு வந்து சகோதரியிடம், 'தலை சுற்றுகிறது பாயை விரி' என்று கூறினாரென்றும் மரண விசாரணையின் போது கூறப்பட்டது.

சாவகச்சேரி டாக்டர் திரு சண்முகராசா பிரேத பரிசோதனை செய்தார். மரண விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கே. திரவியநாயகம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## ஐயாறன் எழுதுகிறது

வல்வெட்டித்துறை சிவன் கோவில் முன்பாக ஊரே திரண்டிருந்தது. ஆண்களும் பெண்களும், குழந்தைகளும் அமைதியாக இருந்து, "நமசிவாய வாழ்க நாதன் தாழ் வாழ்க..." என்று பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகள் கூற, மக்களும் சேர்ந்து பஜனை செய்த தெய்வீகக் காட்சி என் மனதைப் பெரிதும் கவர்ந்தது.

இக்காலத்திலே மக்களெல்லாம் சினிமாவுக்குத்தான் திரளாகச் செல்லுவதாயும், கோயிலுக்கென்றால் யாரும் வருவதில்லை என்றும் பொதுவாக ஒரு புகாருண்டு. ஆனால் நேற்று முன் தினம் அக்கோவில் முன் அவ்வளவு மக்கள் முருகதாஸ் பஜனையில் பக்தியுடன் ஈடுபட்டதைக் கண்டதும், அந்தப் புகார் அவ்வளவு சரியென்று கூறமுடியாது.

நாகப்பட்டணத்திலே பித்துக்குளி அவர்கள் ஓரிடத்தில் பஜனை செய்தாராம். அவ்வூரிலிருந்த சினிமாசாலைகளில் படம் பார்க்க கூட்டமே இல்லை என்றும், மக்களெல்லாம் பஜனைக்குப் போய்விட்டதால், காட்சி நடைபெறவில்லை என்று தியேட்டக்காரர் அறிவிக்க நேரிட்டதாம்.

இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. மனதைக் கவரக்கூடிய இனிய முறையிலே கோவில்களில் பயனுள்ள நிகழ்ச்சிகளுக்கு ஒழுங்கு செய்தால் மக்கள் கூட்டம் வர ஆவலுடன் காத்துள்ளதென்றும் அவர்கள் மீது குறை கூறக் கூடாதென்றும் தெரிகிறது.

வல்வையிலே இந் நிகழ்ச்சிக்கு ஒழுங்கு செய்தது வைரமாளிகையை சேர்ந்த ஒரு பிரபல வர்த்தகராம். நேற்று யாழ். திறந்தவெளி அரங்கிலே இதே பஜனைக்கு ஒழுங்கு செய்ததும் 'மில்க் வைட் சோப்' என்ற மற்றொரு முக்கிய வர்த்தக ஸ்தாபனத்தாரென்று அறிய வந்தேன். சமூக நன்மைக்கான இவ்வித விஷயங்களில் உதவும் வர்த்தகர்கள், சமூகத்தின் நன்மைக்குப் பாத்திரமாவார்கள்.

ஃ ஃ ஃ

பல இடங்களிலே சிவ புராணம் பாடக் கேட்டிருக்கிறேன். எப்போது அது ஓயும் என்று தோன்றும். முருகதாஸ் அவர்கள் இதை பாடியவிதமே வேறு. சில சில அடிகளை இங்கும் அங்குமாக எடுத்துத் தாம் இனிமையாகப் படி, மற்றவர்களையும் சேர்ந்து பாடவைத்தார். சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து பாடவும், உள்ளம் நெகிழ்ச்சியடையவும் இது பெரிதும் உதவுவதாக இருந்தது. இன்னும் கொஞ்சம் பாடமாட்டாரா என்று அவ்வளவு ருசி.

வெறும் பாட்டுடன் நிற்காமல், ஆங்காங்கே தெய்வ பக்தியை வளர்க்கும் முறையில் உருக்கமாகப் பேசுகின்றார். பேச்சுக்குப் பாட்டும், பாட்டுக்குப் பேச்சும் துணை செய்து, நிகழ்ச்சியே கேட்போரை மெய் மறக்கச் செய்கின்றது. சுமார் 3 மணி நேரம் போனதே தெரியவில்லை. கூடியிருந்த மக்களுக்கெல்லாம் பெரும் திருப்தி. பஜனைப் பாட்டுகள் மிக எளிய முறையில் புரியும் படியாக இருந்ததால் குழந்தைகளும் கூட இதில்சேர்ந்து உற்சாகத்துடன் பாட முடிந்தது. சிவ நாமங்கள் முழங்கின. இந்

[3-ம்கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மேற்கு ஆசியா மீதான விவாதம்

## திங்கள் வரை ஒத்திவைப்பு

## மண்டல சார்பற்ற நாடுகளின் தீர்மானத்தை இஸ்ரேல் நிராகரித்தது

### அதிக ஆதரவு இருப்பதாக பம்பாயில் சாக்ளா அறிவிப்பு

நியூயோர்க், ஜூலை 1

**மேற்கு ஆசிய விவகாரத்தின் மீதான விவாதத்தை ஐ. நா. பொதுச்சபை. திங்கட்கிழமை வரை ஒத்திவைத்துள்ளது.**

நேற்றைய கூட்டத்தில், மண்டலசார்பற்ற நாடுகளின் சார்பில், யூகோஸ்லேவியா, திருத்தப்பட்ட வாசக தீர்மானமொன்றைச் சபையில் சமர்ப்பித்தது.

இத்தீர்மானம் மேற்கு ஆசியாவுக்குஐ. நா. பொதுக் காரியதரிசி, தனது சொந்தப்பிரதிநிதி ஒருவரை அனுப்பி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டது.

இஸ்ரேல் துருப்புகள், ஜூன் 5-ந் தேதிக்கு முன்னிருந்த நிலைகளுக்கு வாபஸ் பெறவேண்டுமென்றும் இத்தீர்மானம் கோருகிறது.

மண்டலசார்பற்ற நாடுகளின் முன்னைய தீர்மானம், இஸ்ரேல் துருப்புகள் 1949ம் வருடத்தைய போர் ஒய்வுக் கோட்டுக்கு வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டிருந்தது.

துருப்புகள் வாபஸாகிய பின், மேற்கு ஆசிய விவகாரம் சம்பந்தமான சகல சட்ட, அரசியல், மனிதாபிமானப் பிரச்னைகளையும் தீர்ப்பதற்கான வழிவகைகளை ஐ. நா. பந்தோபஸ்து சபை கூடி ஆராயவேண்டுமென்றும் அத்தீர்மானம் கேட்டுள்ளது.

**லத்தீன் அமெரிக்க தீர்மானம்**

லத்தீன் அமெரிக்க நாடுகளும் நேற்று ஒரு தீர்மானத்தைச் சபையில் தாக்கல் செய்தன.

இஸ்ரேல் துருப்புகளின் வாபஸுடன், இஸ்ரேலும் அரபுநாடுகளும் போரை நிறுத்திவிட்டதாகக் கூறும் பிரகடனமும் இணைக்கப்பட வேண்டுமென்று இத்தீர்மானம் கோருகின்றது.

ஜெருசலத்தைச் சர்வதேசக் கட்டுப்பாட்டுக்குட் படுத்துமாறும் தீர்மானம் கேட்டுக் கொண்டுள்ளது.

**திரு. எபான் நிராகரித்தார்**

மண்டல சார்பற்ற நாடுகளின் திருத்தப்பட்ட தீர்மானத்தை இஸ்ரேல் வெளியுறவு மந்திரி திரு. எபான் நிராகரித்தார். முன்னைய தீர்மானத்தையும் அவர் நிராகரித்திருந்தது வாசகர்கள் அறிந்ததே.

தீர்மானத்தை நிராகரித்துப் பேசுகையில், அது இஸ்ரேலுக்கும் அரபுநாடுகளுக்குமிடையே மீண்டும் போர் நடவடிக்கைகளை ஏற்படுத்தவே வழிவகுக்குமென அவர் கூறினார்.

"மேற்கு ஆசியாவில் போர் ஏற்படுவதை ஐ. நா. வினால் தடுக்கமுடியவில்லை. இத்தீர்மானம், அங்கு சமாதானம் ஏற்படுவதையும் தடைசெய்துவிடும்" என்றார் திரு. எபான்.

**யு தாண்ட் உத்தேசம்**

ஐ நா. பொதுக் காரியதரிசி யு தாண்ட், தமது சொந்தப் பிரதிநிதி ஒருவரை மேற்கு ஆசியாவுக்கு அனுப்ப உத்தேசித்துள்ளார்.

ஐ. நா. சபைக் கூட்டத்துக்குச் சென்றிருந்த இந்திய வெளியுறவுமந்திரி திரு. சாக்ளா, நேற்று பம்பாய் வந்து சேர்ந்தார்.

**சாக்ளா கருத்து**

இந்தியா, யூகோஸ்லேவியா உட்பட 15 மண்டல சார்பற்ற நாடுகள் சமர்ப்பித்துள்ள தீர்மானத்துக்கு ஐ. நா. பொதுச்சபையில் அதிக ஆதரவு இருப்பதாக திரு. சாக்ளா தெரிவித்தார். சோஷலிச, அரபு நாடுகள் அனைத்தும் அத்தீர்மானத்தை ஆதரிப்பதாக அவர் கூறினார்.

அத்தீர்மானம் 'சர்ச்சை [illegible] மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமென்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**சூயஸ்**

சூயஸ்கால்வாய்பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது, அதன் கிழக்குக் கரையில் இஸ்ரேல் துருப்புகள் நிலை கொண்டிருக்கும்வரை, கால்வாயை மீண்டும் திறப்பது கஷ்டமாகவே இருக்குமென்றும். கிழக்குக் கரையிலிருந்து இஸ்ரேல் துருப்புகள் வாபஸ்பெற்றால், விரைவிலேயே அது திறக்கப்பட்டு விடுமென்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

## 3,300 பேருக்கு சிறை வாசம்

ஜாக்கார்த்தா, ஜூலை 1

இந்தோனேஷிய இராணுவ அதிகாரிகள், பெரிய ஜாக்கார்த்தாவிலுள்ள 3,300 பேர்களைச் சிறைக்கு அனுப்பி வைத்துள்ளனர். இவர்களில் 124 பெண்களும் இருக்கிறார்கள்.

1965-ம் ஆண்டைய கம்யூனிஸ்ட் இராணுவப் புரட்சிச் சதியில் சம்பந்தப்பட்ட குற்றத்துக்காகவே, இவர்கள் சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர்.

## சோவியத் அதிபர் டமாஸ்கஸ் சென்றார்

மாஸ்கோ, ஜூலை 1

சோவியத் அதிபர் திரு. பொட் கோர்ணி நேற்று இங்கிருந்து டமாஸ்கஸுக்குப் பயணமானார்.

டமாஸ்கஸில் அவர் சிரியாத் தலைவர்களைச் சந்தித்து, மேற்கு ஆசிய விவகாரம் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

ஐ. அ. குடியரசிலிருந்து திரும்பி 5 தினங்களுக்குள் அவர் சிரியாவுக்கு இப் பிரயாணத்தை மேற்கொண்டுள்ளார்.

**மே. ஆசிய போரில்**

## 5,000 ஐ. அ. கு. துருப்புகள் இறந்தனர்

கெய்ரோ, ஜூலை 1

அண்மையில் நடைபெற்று முடிந்த மேற்கு ஆசியப் போரில் ஐ. அ. குடியரசுத் துருப்புகளில் 5,000 பேர் இறந்துள்ளதாக 'அல் அஹ்ராம்' என்ற பத்திரிகை இங்கு அறிவித்துள்ளது.

போரைத் தொடர்ந்து, துருப்புகள் இழப்புப் பற்றி ஐ. அ. குடியரசில் செய்யப்பட்டுள்ள முதல் மதிப்பீடு இதுவே.

## தமிழகத்தில் தண்ணீர் ஆராய்ச்சித் திட்டம்

சென்னை, ஜூலை 1

விவசாயதேவைகளைப் பூர்த்தி செய்ய, தமிழகத்தில் பூமிக்கடியில் தண்ணீர் கிடைக்குமா என்பது பற்றி தமிழக அரசாங்கம் ஆராய்ச்சி நடாத்தவிருக்கிறது.

இத்திட்டத்துக்கு ஐ. நா. வின் உதவியும் கிடைக்கும்.

திட்டம் மூன்று கட்டங்களாக பிரிக்கப்படும். நெய்வேலி, சென்னையும்அதன்சுற்றுப்புறமும், பாலாறுப்பகுதி காவேரி கழிமுகப்பத்தி ஆகிய நான்கு இடங்களிலும் ஆராய்ச்சி நடத்தப்படும்.

ஐ. நா. இத்திட்டத்துக்கு 1கோடியே 23 லட்சம்ரூபா அளித்துதவும். ராஜ்ய அரசாங்கத்துக்கு 85 லட்சம் ரூபா செலவாகும்.

திட்டத்தின் பயனாகச் சுமார் 7லட்சம் கலன் தண்ணீர் கிடைக்குமென எதிர் பார்க்கப்படுகிறது,

இவ்விபரங்களை தமிழகப் பொதுத்துறை மந்திரி திரு. மு. கருணாநிதி தமிழக கீழ் சட்டசபையில், [illegible] குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

**வட வியட்நாமில்**

## ரஷ்ய கப்பல் மீது அமெரிக்ககுண்டுவீச்சு

### மீண்டும் சம்பவம்

மாஸ்கோ, ஜூலை 1

வட வியட்நாமிலுள்ள ஹைபாங் துறைமுகத்தில் சோவியத் வர்த்தகக் கப்பலொன்றின் மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீசியதாக ரஷ்யா அமெரிக்காவிடம் ஆடசேபித்துள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னரும் இது போன்ற சம்பவம் நிகழ்நதது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அப்போதும், சோவியத் ரஷ்யா ஆட்சேபம் தெரிவித்திருந்தது.

**ராஜாங்க இலாகா அறிவிப்பு**

அந்த ஆட்சேபத்தை முதலில் மறுத்த அமெரிக்க ராஜாங்க இலாகா, பின்னர் குண்டு வீச்சு தவறுதலாக நடைபெற்றிருக்கலாமென ஒப்புக் கொண்டது.

இம்முறை நடைபெற்றுள்ள சம்பவத்தையிட்டு அமெரிக்க ராஜாங்கஇலாகா வட வியட்நாம் துப்பாக்கி எதிர்ப்பு இயந்திரங்கள் மீது செய்யப்பட்ட தாக்குதலின் போது, குண்டு வெடித்துச் சிதறி, ரஷ்ய கப்பல் மீதும் விழுந்திருக்கலாம் என அறிவித்துள்ளது.

## திபேத்திய மக்கள் சீன மயமாகின்றனர்

### செங்காவலர் கொடுமையால் பல நூறு பேர் தற்கொலை

புதுடில்லி, ஜூலை 1

இந்திய எல்லைகளுக்கு அப்பாலிருந்து வரும் செய்திகள், திபேத்திய மக்களைச் சீன மயமாக்குவதில் சீன அரசாங்கம் வெற்றியடைந்து வருவதாகத் தெரிவிக்கின்றன.

திபேத்திய ஜனத்தொகையான 20 லட்சம் மக்களில் சுமார் 15 லட்சம் மக்கள் சீனப்பிரதேசத்திலிருந்து திபேத்துக்குள் கொண்டு வரப்பட்டவர்கள் என மதிக்கப்பட்டுள்ளது,

திபேத்தில் சீனச் செங்காவலரின் அட்டகாசங்களைத் தாங்க முடியாமல், நூற்றுக்கணக்கானோர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்களெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், உள்ளூர் மக்கள் சீனத் துருப்புகளை ஆங்காங்கே தாக்கி வருவதாகவும், தமது சீன எதிர்ப்பை வலுவான முறையில் காட்டி வருவதாகவும் தெரிகிறது.

## கனடா நூற்றுண்டு நிறைவு விழா

### பிரதமர் பியேர்ஸனுக்கு இந்திரா வாழ்த்துச் செய்தி

புதுடில்லி, ஜூலை 1

கனடாவின் நூற்றுண்டு நிறைவு விழாவையொட்டி இன்று இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, கனடாப் பிரதமர் திரு. லெஸ்டர் பியேர்ஸனுக்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்வார்.

"எங்கள் ராஷ்டிரபதி [டாக்டர் சாகீர் ஹுசெயின்] உங்கள் மத்தியில் இருக்கும்போது, இச்செய்தியை உங்களுக்கு அனுப்பி வைப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்" என்று பிரதமர் இந்திரா, தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**சிறப்பான பணி**

உலக சமானத்துக்காகக் கனடா ஆற்றிவரும் சிறப்பான பணியைப் பிரதமர் இந்திரா அச்செய்தியில் போற்றினார்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்குக் கனடா அளித்துவரும் தாராள உதவியைத் திருமதி இந்திரா காந்தி, கனடாவின் இந்தத் தாராளத்தன்மையின் பலனை இந்தியாவும் அதிகமாகப் பெற்றுள்ளது என்று குறிப்பிட்டார்.

### முன்னாள் காஷ்மீர் பிரதமர் பக்ஷி லஞ்ச விசாரணை அறிக்கை

ஸ்ரீநகர், ஜூலை 1

முன்னாள் ஜம்மு-காஷ்மீர் பிரதமரான திரு. பக்ஷி குலாம் முகம்மது மீதான லஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட தனி நபர் கமிஷன் தனது விசாரணையை முடித்துக் கொண்டுள்ளது. விசாரணை அறிக்கை நாளை வெளியிடப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரங்கூனில் தடை உத்தரவு

ரங்கூன், ஜூலை 1

ரங்கூனில் சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்ததைத் தொடர்ந்து, அங்கு ஆர்ப்பாட்டங்களுக்கும், கூட்டங்களுக்கும் அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இத்தடை உத்தரவு ஒரு மாதம் வரை நீடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

## நீர்வேலிக்கு மின்சாரம்

கோப்பாய், சனி

நீர்வேலிப் பகுதிக்கு விரைவில் மின்சார விநியோகம் கிடைக்கவிருக்கிறது.

## 6 அதிகாரிகள் நீரில் மூழ்கினர்

பூனா, ஜூலை 1

பூனாவுக்கருகில் உள்ள ஆறொன்றில் படகில் சென்று கொண்டிருந்த 6 இராணுவ அதிகாரிகள், படகு கவிழ்ந்ததால் நீரில் மூழ்கி இறந்ததாக இங்கு அறிவிக்கப்பட்டது.

## கதாப்பிரசங்கம்

கந்தர்மடம், சனி

கந்தர்மடம் சித்திவிநாயகர் ஆலயத்தில் நாளை இரவு 7 மணிக்கு திரு. வை. நித்தியானந்த சர்மா 'பக்த கௌரி' என்னும் சரிதையை பக்கவாத்திய சகிதம் கதாப்பிரசங்கம் செய்வார்.




## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 2 - 7 - 67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 எங்கள் அதிதி.

இரவு 6-15 குரல்வகை, 6-30 நேயர் கடிதங்கள், 6-45 கத்தோலிக்க ஆராதனை, 7-15 பாட்டு—கௌரீஸ்வரி ராஜப்பன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 மாதர் கேட்டவை.

### கல்விச்சேவை

காலை 10-20 பாலர் நிகழ்ச்சி புனிதமரியாள் கல்லூரி-திருக்கோவை, 10-40 விஞ்ஞான அறிவுப்போட்டி நடத்துபவர் வி. கே. நல்லையா,


மாலை 6-45 பாலர் நிகழ்ச்சி புனிதமரியாள் கல்லூரி திருக்கோணமலை.

இரவு 7-00 விஞ்ஞான அறிவுப்போட்டி நடத்துபவர் வி. கே. நல்லையா.


## "ராலே"

உங்கள் சொகுசுக்கேற்ற சாமான்கள்

- ஸ்பிரிங் கட்டில், பிரேம்கள், எல்லா அளவிலும்



- டிலக்ஸ் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
- டிலேட் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
- ஆஸ்பத்திரி கட்டில்கள்
- டாக்டர் பரிசோதனை கட்டில்கள்
- ஆஸ்பத்திரி தூங்கு கட்டில்கள்
- பஞ்சு - தும்புமெத்தைகள்
- ஸ்பிரிங் மெத்தைகள்
- குழந்தை தொட்டில்
- மெத்தை ஸ்பிரிங்குகள்
- திரைகள்
- சுப்பர் லக்ஸ் கட்டில்கள்

முதலியன

மேற்கொண்டு விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

ஏகவிநியோகஸ்தர்கள்

**த பர்மா டீக் ட்ரேடிங் கம்பனி, லிமிட்டெட்,**

**62, புளூமெண்டால் ரோட்,**

**கொழும்பு-13.**

தொலைபேசி: 2233/34


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளமபரம

### உதவிக்காரியதரிசி தேவை

பளை ப. நோ. கூ. ச. சமாசத்திற்கு உதவிக்காரிய தரிசி தேவை. பிணை ரூபா 1000/- ரொக்கம், ரூபா 3000/- ஆதனம். வயது 25—35. கல்விப் பொதுத்தராதரப் பத்திரம், அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரம், பிறப்புப் பத்திரம் வேறு கல்வித் தராதரப் பத்திரங்கள் இருப்பின் பிரதிகளுடன் விண்ணப்பங்கள் யாவும் சமாசத் தலைவருக்கு 15-7-67 காலை 10 மணிக்கு முன் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். வேறு விபரங்கட்கு காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும். தகைமைக் கேற்பச் சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

இ. இராசசுந்தரம், காரியதரிசி.
2387

## தவநெறிச் செல்வருக்கு

### நயினையில் பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு
தவநெறிச் செல்வர் க. இராமச்சந்திரனை, அவர் ஜனன பூமியாகிய நயினையில் பாராட்ட, ஸ்ரீ முருகமூர்த்தி கோவிலில் சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடந்தது. முதலில் ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவிலில் வழிபட்டபின், 'சமரச ஞானக்கோவை' நூலுடன் ஊர்வலம், நாகஸ்வர பஜனைகளுடன் புறப்பட்டு ஸ்ரீ முருகமூர்த்தி கோவிலுக்கு வந்தது. வழியில் பல இடங்களில் பூரண கும்பம் வைத்து அவரை வரவேற்று உபசரித்தனர். விசேஷ மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த ஸ்ரீ முருகமூர்த்திக்கு ஷண்முகார்ச்சனை முடிந்தபின் நடந்த கூட்டத்தில் பண்டிதர் நா. கந்தசாமி, திரு. சபா ஆனந்தர், கே. பி. ஹரன் இவர்கள் பாராட்டு வழங்கியபின், 'கலைமகள்' ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் 'வேல் தொட்ட காவலன்' எனும் பொருள்பற்றிப் பேசி, நூல் தந்த பெரியாரின் பணிகளைப் பாராட்டினார். திரு. இராமச்சந்திரன் பின்னர் பேசுகையில் ருசியான தமது வாழ்க்கை அனுபவங்களைப் பற்றிச் சுருக்கமாகப் பேசினார். திரு. சண்முகநாதபிள்ளை நன்றி கூறினார்.

### மயிலிட்டி கி.மு.சங்கம்

காங்கேசன்துறை, சனி
மயிலிட்டி கிழக்கு கிராம முன்னேற்றச்சங்க நிர்வாக சபை அங்கத்தவர்கள் தெரிவு வலி-வடக்கு விளையாட்டுப்பகுதி உத்தியோகத்தர் திரு.கே. கந்தசாமி தலைமையில்]நடைபெற்றது.

## வலி.வடக்கு தமிழாசிரியர்சங்க பேச்சுப் போட்டி முடிவு

குரும்பசிட்டி, சனி
வலிகாமம் வடக்குத் தமிழாசிரியர் சங்க ஆதரவில் மல்லாகம் அமெரிக்கன் மிஷன் பாடசாலை மண்டபத்தில் காங்கேசன்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு.வி.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் சுமார் 30 பாடசாலைகள் கலந்து கொண்டன. திருவாளர்கள் த. இராசரத்தினம், வ. கந்தையா ஆகியோர் மேற்பார்வையில் நிகழ்ந்த இப் பேச்சுப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு திரு.சண்முகநாதன் சான்றிதழ்களை வழங்கினார். போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

ஆண்கள்மேற்பிரிவு:-கதிர்காமநாதன்[மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை], க.சிவலிங்கம்[மல்லாகம அ.மி.பாடசாலை], க.பாலகிருஷ்ணன்[மல்லாகம் அ.மி.பாடசாலை]மத்திய பிரிவு:-சி. புவனேஸ்வரன் [அளவெட்டி ஞானோதய வித்தியாசாலை, இ.விக்னேஸ்வரன் [அ.ஞா.வி.] செ. இரத்தினம் [குளமன்கால் றோ.க.பாடசாலை] கீழ்ப்பிரிவு:- கே. சிவனடியான்[மல்லாகம்விசாலாட்சி வித்தியாசாலை], த. ஆனந்தராஜா[ம.வி.வி. ], க. சிவகரன்[அ.ஞா.வி.].

பெண்கள்- மேற்பிரிவு:- ச.மாலினி[சேர். கனகசபை வித்தியாசாலை, பன்னாலை] மு. நாகேஸ்வரி[ விக்னேஸ்வரா வித்தியாசாலை, குப்பிளான்] ,சி. தையல்நாயகி [மல்லாகம்அ.மி.பாடசாலை]

மத்தியபிரிவு;-பொ. இராஜேஸ்வரி [மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை], சி. ஜெயராணி [ஞானோதய வித்தியாசாலை,அளவெட்டி] தி.தவமணி[சேர் கனகசபை வித்தியாசாலை,பன்னாலை].

கீழ்ப்பிரிவு:-ச. வசந்தநாயகி[மல்லாகம் அ. மி. பாடசாலை], செ. தேவசாந்தினி [குளமன்கால் றோ. க. பாடசாலை], சு.கௌரிமாலதி [நகுலேஸ்வர வித்தியாலயம்,கீரிமலை].

## வல்வை.சிதம்பராவிளையாட்டு போட்டி முடிவுகள்

வல்வெட்டித்துறை,சனி
வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப்போட்டி கல்லூரி அதிபர் திரு. தை. அருள்சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா கலந்துகொண்டார். வெற்றி வீரர்களுக்கு திருமதி விக்னராஜா பரிசில் வழங்கினார்.

இவ்வருட சாம்பியனாக குமரகுரு இல்லம் தெரிவு செய்யப்பட்டது. சிதம்பரப் பிள்ளை இல்லம் இரண்டாம் இடத்தையும், ரெங்கநாதன் இல்லமும் சின்னத்தம்பி இல்லமும் மூன்றும், நான்காம் இடத்தையும் பெற்றன.

பின்வருவோர் சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆண்கள் கீழ்ப்பிரிவு; கே, மோகன்,மத்தியபிரிவு: எஸ். சிவநேசசுந்தரம், மேற்பிரிவு: எஸ். செல்வச்சந்திரன், அதிமேற்பிரிவு: எச். எம். பாருக்.

பெண்கள் கீழ்ப்பிரிவு: ஆர். யசோதா. மத்திய பிரிவு: என். ரூபமலர், மேற்பிரிவு: எம். சமலஷ்னனந்ததேவி.

ஒரு மைல் ஓட்டம்: கே. பாலசிங்கம். கழக ஓட்டம்: உதயசூரியன், றெயின் போஸ்.

இல்ல அலங்கரிப்பு: குமரகுரு, சின்னத்தம்பி, ரெங்கநாதன்.

## உடுப்பிட்டி மகளிர் கல்லூரி இல்லப் போட்டி முடிவுகள்

இமையாணன், சனி
உடுப்பிட்டி மகளிர்கல்லூரியின் இவ்வருட விளையாட்டுப் போட்டியின் போது "கிச்கொக்ஸ்"[மஞ்சள் இல்லம் அதிக புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றது. இரண்டாவதாக "மில்லர்"[நீலம்] இல்லமும் மூன்றாவதாக "கேஸ்ரிங்" சிவப்பு இல்லமும் வந்தன. கல்லூரி விளையாட்டு மைதானத்தில், அதிபர் செல்வி. மான் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு.வேர்ணன் அபயசேகரா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். திருமதி அபயசேகரா வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்குப் பரிசளித்தார். இவ் விளையாட்டுப் போட்டிகளின் சில முடிவுகள் பின்வருமாறு:-

அணிவகுப்பு:- கேஸ்ரிங் இல்லம், மில்லர் இல்லம், கியூஸ்ரன் இல்லம்.

தேகப்பயிற்சி:- மில்லர், கேஸ்ரிங், கிச்கொக்ஸ்

இல்ல அலங்கரிப்பு:- கேஸ்ரிங், மில்லர், கியூஸ்ரன்.

100 மீற்றர் ஓட்டம் மேற்பிரிவு:-கிருஷ்ண லீலாபாலர் யோகராணி விஜயரத்தினம், தில்லைநாயகம் கந்தசாமி. மத்திய பிரிவு:- சக்தி மகானந்தா ஐயாத்துரை, புஷ்பலீலா மயில்வாகனம், செல்வராணி வல்லிபுரம்.

[6-ம் பக்கம் பார்க்க]

## வரிவிளம்பரம்

### காணவில்லை

இன்சூரன்ஸ் பொலிஸி
எனக்குச் சொந்தமான 51657 இலக்கமுடைய ஆயுள் இன்சூரன்ஸ் பொலிஸியைக் காணவில்லை. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்தில் தந்துதவும்படி வேண்டப்படுகின்றனர். த. கோபாலசிங்கம், "ராஜ் கோபால்ஸ்", 36/1, பெரிய கடை, யாழ்ப்பாணம். 2486

### தேவை

லிகிதர்
றைக்கிளீன் செய்யும் உடைகளை பில் எழுதி எடுப்பதற்கும் பில்லுடன் சரிபார்த்து கொடுப்பதற்கும் ஓர் ஆள் தேவை. தேர்ச்சிபெற்றவர் விரும்பத்தக்கது. சன்லைட் டையேர்ஸ் அன் றைக் கிளீனேஸ் (புதிய பஸ் நிலையத்திற்கு முன்பாக) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 2484


### கல்வி

ஆறு [6] மாதத்தில் ஆங்கிலம் அல்லது சிங்களம் எழுத, வாசிக்க, பேச வேண்டுமா? விபரங்களுக்கு எம்மிடம் தொடர்புகொள்ளவும். கல்விநிலையம், சிவயோக ஹாட்வெயர்ஸ் மேல்மாடி, 6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2474

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, இரத்தி முதலிய கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## 'தெய்வீகவாழ்வுவாழ்ந்தவர் டாக்டர் குருசாமி'



யாழ்ப்பாணம், ஞாயிறு
'அடக்கமாக இருந்து கொண்டே பொதுப் பணிகளிலும் திருப்பணிகளிலும் ஈடுபட்டு வந்து சமூகத்திற்குப் பெரும் தொண்டாற்றியவர் டாக்டர் குருசாமி. அவரின் தெய்வீகவாழ்க்கை எதிர்கால சந்ததியினருக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக அமைந்துள்ளது.'

முன்னாள் வைத்திய அத்தியட்சகரும் சமூகத்தொண்டருமான டாக்டர்சி.குருசாமியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்து முகமாக கொட்டடி நமசிவாய வித்தியாசாலை மண்டபத்தில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்திய டாக்டர் கே.கனகரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு.கே.பி.ஹரன்பேசுகையில்யாழ்ப்பாணத்தில் இறை வழிபாட்டை வளர்க்க டாக்டர் குருசாமி உழைத்து வந்தாரென்றும் சிவதொண்டன் நிலயம் அவர் செய்த சேவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என்றும் கூறினார்.

முதலியார் சி. முத்துத்தம்பி பேசுகையில் கடமையுணர்வும் பொறுமையும்

[6-ம் பக்கம் பார்க்க]


கும்பாபிஷேக தேவைகளுக்கு
தேவையான
அஷ்டபந்தன மருந்து

* கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்
* திருமண விழாக்கள்
* புதுமனைப் பிரவேசம்
* புதுமனைக்கு அத்திவாரமிடல்

ஆகிய வைபவங்களுக்குத் தேவைப்படும் அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, விளவு சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனைதிகள், பன்னீர், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம் முதலிய சகல சாமான்களும்
மற்றும்
சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டுகள் ஆகியவைகளும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

* மயில் மார்க் சந்தன வில்லைகள்
* சுகந்த சந்தனப் பவுடர்
நறுமணம் கமழும்
* சந்தனக் குழம்பு
[உடன் யந்திரத்தினால் அரைத்தது]
எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
[மருந்து, மருந்துச்சரக்கு வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். றோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068



கட்டிட ஒப்பந்தக்காரர்களுக்கு
ஓர் நற்செய்தி

எங்களிடம் குறைந்த செலவில் சிறந்த முறையில் கட்டிடமேல் கூரை இரும்பு வேலைகள், இரும்பு கேட், கிரில்கள், பைப்பிட்டிங், வாட்டர்டேங் [நீர்த்தாங்கி] வெல்டிங், வார்ப்பு வேலைகள், கூரைசீட், ஆணி முதலியவைகள் உடனுக்குடன் குறிப்பிட்ட தவணைக்குள் செய்து கொடுக்கப்படும்.

ஒருமுறை நேரில் எங்களிடம் தொடர்பு கொண்டு உங்களின் ஆதரவை நல்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.



மகா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
அன் சிலோன இன்டஸ்ரியல் இன்ஜினியரிங் வேக்ஸ்
150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆளில்லாத வீட்டில் ரூ. 40,000 சேலைகள்

## யாழ்ப்பாணத்தில் சுங்க அதிகாரிகள் வேட்டை

மாவிட்டபுரம், சனி

சுமார் 40,000 ரூபா பெறுமதியான 528 விலையுயர்ந்த சேலைகள் நேற்று திருநெல்வேலியில் நாச்சிமார் கோவில் ரோட்டிலுள்ள ஒரு வீட்டில் சுங்கப்பகுதியினரால் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

யாழ். சுங்கப்பகுதி உதவி சுங்க தடுப்பு அதிகாரி திரு. அந்தோனிராசா தலைமையில், கோப்பாய் பொலிஸாரின் உதவியுடன் சென்றஇக் கோஷ்டி, அங்குள்ளவீட்டில் திடீர் முற்றுகையிட்டு இச் சேலைகளைக் கண்டுபிடித்தனராம்.

சுங்கப் பகுதியினரும், பொலிஸாரும் அந்த வீட்டைக் காவல் செய்து கொண்டு திடீரென உள்ளே சென்றபோது வீட்டில் எவரும் இருக்கவில்லையென்றும் கைப்பற்றப்பட்ட சேலைகளின் பெறுமதிசுமார் 40,000 ரூபா எனவும் சுங்கப்பகுதியினர் மதிப்பிட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக விசாரணை நடத்திய வடபகுதி உதவி சுங்க அதிபர் திரு. ஜெ. கந்தசாமி சேலைகளைப் பறிமுதல்செய்ய உத்தரவிட்டுள்ளார்.

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த ஒருவர் அவ்வீட்டைதான் வாடகைக்கு எடுத்திருப்பதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்தே சுங்கப் பகுதியினர் உள்ளேசென்று சோதனையிட்டு விலையுயர்ந்த 528 சேலைகளையும் கண்டுபிடித்தனராம்.

வல்வெட்டித்துறை வாசி பிணையில் விடப்பட்டுள்ளார். மேல்விசாரணை ஒத்தி வைக்கப்படடுள்ளது. கைப்பற்றப்பட்டசேலைகள் தன் நண்பனுடைய மற்ெருரு வல்வெட்டித்துறை வாசியினுடையதென்று வீட்டைவாடகைக்கு எடுத்தவர் சுங்கப் பகுதியிடரிடம் தெரிவித்ததாகவும், நண்பனிடம் சுங்கப் பகுதியினர் விசாரித்தபோது, அவர் அதைஏற்றுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

இவ்வீடு, நீண்டகாலமாக கடத்தலுக்கு பயன்பட்டு வந்ததாகவும், எந்நேரமும் வீடு மூடப்பட்டிருந்ததால் சந்தேகம் கொண்ட சிலர் சுங்கப்பகுதியினருக்குத் தகவல் கொடுத்ததாகவும் தெரியவருகிறது.

## யாழ். ரயில் நிலையத்தில் ரூ. 6000 பொருள்கள் பறிமுதல்

மாவிட்டபுரம், சனி

காத்தான் குடியைச் சேர்ந்த ஒருவரிடம், சுமார் 6000 ரூபா பெறுமதியான பொருள்களை சுங்கப்பகுதியினர் நேற்றுமுன்தினமிரவு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் வைத்து கைப்பற்றினர். கள்ளக்கடத்தல் என்ற சந்தேகத்தின் மீது இவை கைப்பற்றப்பட்டன.

சுங்கப்பகுதி தடுப்பு அதிகாரி திரு. அந்தோனிராசா தலைமையில் சென்றகோஷ்டி யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் காத்திருந்த போது, இவர்களுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு, அந்த நபர் கோண்டாவிலிலிருந்து பிரயாணம் செய்ததாகவும், சுங்கப்பகுதியினர் வேறு வழியின்றி டிக்கட் எடுத்து, புகைவண்டியில் ஏறி சோதனைசெய்தபோது சம்பந்தப்பட்ட நபர் கண்டுபிடிக்கப்பட்டார் எனவும் தெரியவருகிறது.

இரு புதிய சூட்கேசில், இறக்குமதிசெய்யப்படாத பவுண்டன்பேனைக்களும், இமிடேஷன் முத்துமாலைகளும், இருந்ததாக கூறப்படுகிறது.

விசாரணை நடத்திய உதவி சுங்க அதிபர் திரு. ஜே. கந்தசாமி, பொருட்களை பறிமுதல்செய்ய உத்தரவிட்டு அந்த நபரை பிணையில்செல்ல அனுமதித்துள்ளார்.

## கம்பம் முறிந்து ஊழியர் மரணம்

கிளிநொச்சி, சனி

ஜா-எலையைச் சேர்ந்த எச். எச். பர்னண்டோ என்பவர் கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த கரடிப்போக்கில் 32 அடி உயரமின்சாரக் கம்பதினின்றும் விழுந்து மரணமானுர். சுன்ஞகம் அரசாங்க மின்சாரப் பகுதியில் கடமையாற்றிய இவர் மின்சார இணைப்பு வேலையிலீடுபட்டிருந்த போது கம்பம் முறிந்து விழுந்ததால் ஸ்தலத்திலேயே மரணமானுர். மின்சாரப்பகுதி என்ஜினியர் திரு. ரி. வி. பாலசுப்பிரமணியம், கிராமசபை அக்கிராசனர் திரு. வி. ஆனந்தசங்கரி, இறந்தவரின் சக ஊழியர்கள் ஆகியோர் சாட்சியமளித்தனர். மரண விசாரணை அதிகாரி தமது தீர்ப்பை ஒத்திவைத்து பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

### முதல் இடம்

பண்டத்தரிப்பு, சனி

வலி. மேற்கு கயரோக நிவாரண சங்கத்தினரால் நடாத்தப்பெற்ற நாடகப் போட்டி, பாட்டுப் போட்டிகளில் இளவாலை என்றியரசர் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

### உடுப்பிட்டி . . .

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கீழ்ப்பிரிவு:- மேரிதிரேசா அந்தோனிமுத்து, ரஞ்சனி தம்பிமுத்து, நேசமணி கனகரத்தினம். உயரம் பாய்தல்:- மத்தியபிரிவு;- செல்வராணி முத்துசாமி, சூரியேஸ்வரி குமாரசூரியர், செல்வராணி வல்லிபுரம். கீழ்ப்பிரிவு:- சிவசெல்வம் கிருஷ்ணுனந்தம், நேசமணி கனகரத்தினம், மேரி ஏபிரகாம்.

மேற்பிரிவில் கிச்கொக்ஸ் இல்லத்தைச் சேர்ந்த கிருஷ்ணலீலா பாலரும், மத்திய பிரிவில் மில்லர் இல்லத்தை சேர்ந்த சக்திமகானந்தா ஐயாத்துரையும், கீழ்ப்பிரிவில் மேரி திரேசா அந்தோனிப்பிள்ளையும் வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

### 'தெய்வீக வாழ்வு . . .

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

பெருந்தன்மையும்கொண்ட டாக்டர் குருசாமி மேல்நாட்டு வைத்தியத்துடன் சுதேச வைத்தியத்தைப் பற்றியும் நன்ருகத் தெரிந்து வைத்திருந்தா' என்ருர்.

முன்னுள் வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம் பேசுகையில் டாக்டர் குருசாமி நேர்மையும் கண்ணியமும் மிக்கவர் எனக்குறிப்பிட்டார்.

பண்டிதர் க. கி. நடராசா பேசுகையில் டாக்டர் குருசாமியின் சேவை பலரை வாழவைத்துள்ளதாகக்கூறினுர். திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகமும் பேசினுர்.

முன்பதாக டாக்டர் குருசாமியின் உருவப்படம் அவரது இல்லத்திலிருந்து ஊர்வலமாக மேற்படி பாடசாலை மண்டபத்துக்கு எடுத்துவரப்பட்டது.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

இன்று மாலை அம்பாறையில் இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு

13 Q 0252 ரூ. 100,000

இரண்டாவது பரிசு

24 N 0776 ரூ 40,000

மூன்ருவது பரிசு

06 S 0142 ரூ. 10,000

தலா ரூபா 1298—80 சதம் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள்:

| | |
|---|---|
| 17 E 0031 | 22 S 0043 |
| 22 V 0185 | 24 B 0385 |
| 32 W 0178 | 42 R 0056 |
| 41 R 0158 | 16 P 0358 |
| 35 B 0488 | 23 R 0067 |
| 32 H 0674 | 33 M 0291 |
| 04 S 0008 | 12 L 06[illegible]8 |
| 26 P 0639 | 31 K 0357 |
| 55 V 0735 | 50 K 0519 |
| 54 G 0323 | 54 M 0464 |
| 39 W 0776 | 52 D 0558 |
| 02 W 0005 | 17 K 0517 |
| 12 H 0932 | 28 A 0737 |
| 55 C 0648 | 25 O 0336 |
| 55 Q 0474 | 21 Z 0969 |
| 46 X 0524 | 11 J 0205 |
| 26 Z 0033 | 06 C 0426 |
| 06 C 0588 | 47 Q 0350 |
| 12 P 0550 | 45 G 0378 |
| 50 S 0067 | 20 O 0725 |
| 02 C 0117 | 10 R 0606 |
| 27 E 0701 | 02 F 0815 |
| 54 R 0390 | 43 G 0171 |
| 28 B 0005 | 56 B 0759 |
| 41 V 0311 | 28 E 0570 |
| 29 M 0699 | 37 O 0421 |
| 44 O 0325 | 37 Y 0067 |
| 14 N 0879 | 06 C 0457 |
| 54 J 0709 | 31 Q 0705 |
| 43 G 0687 | 28 J 0694 |
| 14 Z 0749 | 44 L 0987 |
| 26 K 0005 | 47 K 0038 |
| 37 E 0041 | 24 X 0425 |
| 38 D 0936 | 32 U 0744 |
| 52 Y 0900 | 48 X 0885 |
| 32 A 0485 | 40 M 0917 |
| 31 A 0604 | 44 V 0692 |
| 40 A 0234 | 55 H 0982 |
| 24 N 0304 | 51 U 0042 |
| 06 Q 0688 | 19 T 0212 |
| 21 P 0832 | 45 Z 0035 |
| 07 J 0096 | 55 D 0101 |
| 15 O 0535 | 47 U 0064 |
| 15 Z 0029 | 26 Z 0107 |
| 21 J 0042 | 48 R 0303 |
| 20 E 0804 | 09 M 0131 |
| 32 E 0944 | 54 S 0647 |
| 56 O 0662 | 36 L 0193 |
| 32 P 0544 | 45 E 0521 |
| 13 A 0156 | 40 A 0077 |

[இவை உறுதிப்படுத்தப்படவேண்டும்.]

## சிகரட் புகையிலை

வட்டுக்கோட்டை, வெள்ளி

இப்பகுதியில் 3 கூட்டுறவு சிகரட் புகையிலைச் சங்கங்கள் போறணைகளமைத்து சிகரெட் புகையிலை பதம் பண்ணிவருகின்றன. சென்ற ஆண்டுவரை சுமார் ஒரு லட்சம் ரூபாவிற்கு உற்பத்தி செய்தவர்கள், இவ்வாண்டில் கிட்டத்தட்ட 3 லட்சம் ரூபாவிற்கு சிகரெட் புகையிலை விற்பனை செய்துள்ளனர்.

## 24 பேர் பலி

### விமானம் விழுந்து நொருங்கியது

ஹாங்கொங், ஜூன் 30

தாய்லாந்திலிருந்து ஹாங்கொங்குக்கு வந்துகொண்டிருந்த பிரயாணிகள் விமனம் ஒன்று ஹாங்கொங்கிலுள்ள துறைமுகமொன்றில் விழுந்து நொருங்கியதில் 24 பேர் மாண்டதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

### சர்வதேச கூட்டுறவு தினவிழா

அராலி, வெள்ளி

இங்குள்ள 14 கூட்டுறவு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கூடி சர்வதேச கூட்டுறவு தினவிழாவைப் பரந்த அடிப்படையில்கொண்டாடுவதெனத் தீர்மானித்தனர்.


கடைசி வாரம்

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]

தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

ஆகிய திரைகளில்

தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!


தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!

பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!

நடிக மன்னன் சிவாஜி கணேசன்,

நடிகையராணி கே. ஆர். விஜயா,

ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா, நாகேஷ்



வி. கே. ஆர். பிக்சர்ஸின்

செல்வம்



ராஜா RAJAH

யாழ்ப்பாணம் JAFFNA

தினசரி 2-30, 6-30, 9-45

ப்போயாதினங்களில் 4காட்சிகள்

ரவிச்சந்திரன் - வாணிஸ்ரீ நடித்த

தங்கத் தம்பி



நியூ காலிங்கன் [இனுவில்]

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறைதினங்களில் 2-30

ரவிச்சந்திரன் ஜெயலலிதா நடித்த

குமரிப் பெண்



மனோஹரா [யாழ்ப்பாணம்]

தினசரி 2-30, 6-30, 10-00

எம். ஜி. ஆர்.—சரோஜா நடித்த

பாசம்



REGAL - JAFFNA

Time: 4-30, 7-00 p. m. 9-45 p. m.

Peter Mann
Jocelyn Lane
in
The Sword of Alibaba


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஜூலை மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org